605 / 20 END.

## தேர்வுத்தாள்

### அ பிரிவு

A1 வேற்றுமை (10 மதிப்பெண்கள்)

Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு.

Q1 கட்டடத்தின் இரண்டாவது ____________ பிடித்த தீ கட்டடம் முழுவதும் பரவியது.

(1) தளத்துடன்
(2) தளத்திற்கு
(3) தளத்தில்
(4) தளத்தின்

Q2 மாணவர்களின் சேமிப்புப் பழக்கத்தை அறிய, பள்ளி ____________ ஓர் ஆய்வை நடத்தியது.

(1) பெற்றோர்களுக்கு
(2) பெற்றோர்களால்
(3) பெற்றோர்களை
(4) பெற்றோர்களிடம்

Q3 பல முதியவர்கள் குடியிருப்பு வட்டாரத்தில் மின் மோட்டார் ____________ பயன்படுத்துகின்றனர்.

(1) சைக்கிளில்
(2) சைக்கிளுக்கு
(3) சைக்கிளை
(4) சைக்கிளின்

Q4 முகாமில் மாணவர்கள் பாரம்பரிய ____________ தமிழ்மொழியின் சிறப்பையும் அறிந்துகொண்டனர்.

(1) விளையாட்டுகளை
(2) விளையாட்டுகளால்
(3) விளையாட்டுகளுக்கு
(4) விளையாட்டுகளோடு

More papers at www.testpapersfree.com

Q5 ரவி புத்தகம் படிப்பதை வெறுத்ததால், அது அவனுடைய அறிவு _______________ பெரும் தடையாக இருந்தது.

(1) வளர்ச்சியால்
(2) வளர்ச்சிக்கு
(3) வளர்ச்சியிலிருந்து
(4) வளர்ச்சியுடன்

A2 செய்யுள் / பழமொழி (10 மதிப்பெண்கள்)

**Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு.**

Q6 இளமையில் சோம்பல் முதுமையில் _______________

(1) வறுமை
(2) கல்வி
(3) கண்ணியம்
(4) பெருமை

Q7 மின்னுவது _______________ பொன்னல்ல.

(1) முற்றிலும்
(2) எல்லாம்
(3) முதலும்
(4) அனைத்தும்

Q8 தொட்டனைத்து ஊறும் மணற்கேணி _______________ கற்றனைத்து ஊறும் அறிவு.

(1) மானிடர்க்கு
(2) மக்களுக்கு
(3) மாந்தர்க்கு
(4) மனிதர்க்கு

More papers at www.testpapersfree.com

Q9 ______________________ கைமண்ணளவு கல்லாதது உலகளவு.

(1) அறிந்தது
(2) படித்தது
(3) தெரிந்தது
(4) கற்றது

Q10 இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் __________________ விடல்.

(1) வெறுத்து
(2) முடித்து
(3) செய்து
(4) மறைத்து

A3 அடைமொழி / எச்சம் (10 மதிப்பெண்கள்)

**Q11 முதல் Q15 வரையுள்ள அடைமொழி / எச்சத்தை நிறைவு செய்வதற்கு ஏற்ற பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு.**

Q11) கதிரேசன் பத்தாண்டுகளாக அந்தத் தொழிற்சாலையில்__________________ உழைத்து வந்தான்.

(1) அயரா
(2) அயர்ந்து
(3) அயராத
(4) அயராது

Q12) சோர்வால் மயங்கி __________________ முதியவருக்கு வழிபோக்கர்கள் முதலுதவி சிகிச்சை அளித்தனர்.

(1) விழும்
(2) விழுந்த
(3) விழுகிற
(4) விழுந்தால்

Q13) தாஜ்மஹாலின் ________________ வேலைப்பாடுகளைக் கண்ட சுற்றுப்பயணிகள் அதிசயத்து நின்றனர்.

(1) அழகாக
(2) அழகு
(3) அழகிய
(4) அழகாய்

Q14) நாட்டுத் தலைவர்கள் நேர்மை தவறாது மக்களை ________________ ஆற்றல் உடையவர்களாக இருக்க வேண்டும்.

(1) நல்வழிப்படுத்தி
(2) நல்வழிப்படுத்த
(3) நல்வழிப்படுத்தும்
(4) நல்வழிப்படுத்திய

Q15) ________________ எழுதப்படாத கட்டுரையை ஆசிரியர் திருத்தவில்லை.

(1) முழு
(2) முழுமை
(3) முழுமையான
(4) முழுமையாக

<u>A4 முன்னுணர்வுக் கருத்தறிதல்</u> **(10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து <u>ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது</u>.**

வீரன் ஒருவன் போரில் தோல்வி அடைந்தான். அவன் தன் Q16 ________________ காப்பாற்றிக்கொள்ள காட்டினுள் இருந்த குகை ஒன்றில் ஒளிந்தான். தோல்வியுற்ற வீரனைக் கொலை செய்யுமாறு எதிரி நாட்டுத் தளபதி கட்டளை Q17 ________________. தோல்வி கண்ட வீரன் மிகவும் மனவருத்தம் கொண்டான். மனச்சோர்வினால் Q18________________இழந்தான். ஒரு நாள் சோம்பலுடன் வீரன் குகையில் படுத்திருந்தான். அந்தக் குகையினுள் ஒரு சிலந்தி வாழ்ந்து வந்தது.

More papers at www.testpapersfree.com

அந்தச் சிறிய சிலந்தியின் செயல் அவன் கவனத்தை Q19 _______________. குகையின் ஒரு பகுதியினுள் ஒரு வலையைப் பின்னக் கடுமையாக முயற்சி செய்து கொண்டிருந்தது. சுவரின் மீது ஊர்ந்து செல்லும் போது வலையினில் பின்னிய நூல் அறுந்து சிலந்தி கீழே விழுந்து விட்டது. இவ்வாறு பலமுறை நடந்தது. ஆனாலும், அது தன் முயற்சியைக் கைவிடாமல் மறுபடியும் மறுபடியும் முயன்றது. கடைசியில் Q20_________________ வலையைப் பின்னி முடித்தது. வீரன் "இச் சிறு சிலந்தியே பல முறை தோல்வியடைந்தும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. நான் ஏன் விடவேண்டும்? நானோ வீரன், நான் மறுபடியும் முயற்சி செய்ய வேண்டும்" என்று எண்ணினான்.

(தழுவல்: சிறுவர் நீதிக்கதைகள்)

Q16 (1) நாட்டை
(2) உயிரை
(3) மக்களை
(4) அரண்மையை

Q17 (1) ஆணையிட்டான்
(2) கண்டித்தான்
(3) பிறப்பித்தான்
(4) இசைந்தான்

Q18 (1) வெற்றியை
(2) கவலையை
(3) உறக்கத்தை
(4) துணிவை

Q19 (1) கவர்ந்தது
(2) பிடித்தது
(3) ஆழ்த்தியது
(4) சிந்தித்தது

Q20 (1) ஓரளவு
(2) முறையாக
(3) வெற்றிகரமாக
(4) கவனமாக

More papers at www.testpapersfree.com

B5 தெரிவுவிடைக் கருத்தறிதல் (8 மதிப்பெண்கள்)

**பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.**

குணசீலன் என்கிற அரசன் ஒருவன் நோய்வாய்ப்பட்டு, பல நாட்களாகப் படுத்த படுக்கையாகக் கிடந்தான். அவனைப் பார்க்க தினமும் பல அமைச்சர்கள் வந்துக்கொண்டிருந்தனர். ஒரு நாள், சில பெரிய மனிதர்கள் பலவித பழங்களைக் கொண்டு வந்து மன்னனிடம் கொடுத்துப் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது, ஒரு விவசாயி தன்னைத் தடுத்த காவலாளிகளை அலட்சியப்படுத்திவிட்டு, மன்னனின் படுக்கையருகே வந்து நின்றான்.

அவனது கலைந்த தலைமுடியும், ஆடையில் படிந்திருந்த தூசியும் அவன் கிராமத்திலிருந்து வெகுதூரம் நடந்து வந்திருக்கிறான் என்பதை தெரிவித்தன. அவன் மன்னனிடம், "அரசே. . . . . உங்கள் உடல் தேறவேண்டுமென்று கடவுளிடம் வேண்டினேன். மேலும் சுயமாகச் செய்த மூலிகையைக் கொண்டு வந்திருக்கிறேன். இதனை நீங்கள் தேய்த்து குளித்தால் எந்த நோயும் பறந்துவிடும். ஏற்றுக்கொள்ளுங்கள்." என்றான்.

அவன் மூலிகையை வெளியே எடுத்ததும் அது கெட்டுப் போன நாற்றம் அடித்தது. அங்கிருந்த அமைச்சர்கள் மூக்கைப் பொத்திக் கொண்டார்கள். முகம் சுளித்தார்கள். அரசனோ, மூலிகையைப் பெற்றுக்கொண்டு, தன் கழுத்தில் இருந்து முத்துமாலையைக் கழற்றி எடுத்து, அந்த விவசாயிக்குப் பரிசளித்து அனுப்பினான்.

மன்னனுக்கு நெருக்கமான அமைச்சர் ஒருவர், "அரசே, கெட்டுப்போன மூலிகைக்காக முத்து மாலை பரிசு?" என்று கேட்டார். மன்னனோ, "அது கெட்டிருந்தாலும் அந்த மூலிகையைத் தேய்த்துக் குளித்து குணமடைய வேண்டும் என்று விரும்பி கள்ளங்கபடமற்ற மனதுடன் தன் கிராமத்திலிருந்து ஒரு வாரம் நடந்து வந்திருக்கிறான். அவனது அன்பு உண்மையானது. போலித்தனம் இல்லாதது. உண்மையான அன்புக்கு மதிப்பு மிக அதிகம். நான் அளித்த முத்துமாலைகூட அவனது அன்புக்கு ஈடாகாது" என்று கூறினான். நமது அன்பு உண்மையாக இருந்தால், கடவுளே வந்து, நமக்கு உதவி புரிவார் என்று அரசர் புன்னகையுடன் கூறினார்.

(தழுவல்: சிறுவர்கான குட்டிக்கதைகள்)

More papers at www.testpapersfree.com

**Q21 முதல் Q24 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு.**

Q21 அரசர் பல நாட்களாகப் படுக்கையில் இருக்கக் காரணம் என்ன?

(1) அரசரைப் பல பெரிய மனிதர்கள் காண வந்ததால்
(2) அரசரைக் காண வந்தவர்கள் கொண்டு வந்த பழங்களைச் சாப்பிட்டதால்
(3) அரசர் நோய்வாய்ப்பட்டு இருந்ததால்
(4) அரசரைக் காண வந்த அமைச்சர்கள் பேசிக்கொண்டிருந்ததால்

Q22 ஏன் விவசாயி அரசரைக் காண வந்தார்?

(1) அரசனின் நோயைக் குணப்படுத்த
(2) கடவுளிடம் வேண்டி கொண்டு வந்த மூலிகையைக் கொடுக்க
(3) அரசரைக் கிராமத்திற்கு அழைத்துச் செல்ல
(4) காவலாளிகளை ஏமாற்றுவதற்காக

Q23 எதனால் அரசர் தன் முத்துமாலையை விவசாயிக்குக் கொடுத்தார்?

(1) விவசாயியின் உண்மையான அன்பைக் கண்டு
(2) விவசாயி ஒரு வாரமாகக் கிராமத்திலிருந்து நடந்து வந்ததால்
(3) விவசாயியின் கடவுள் பக்தியைக் கண்டு
(4) விவசாயியின் வீரச் செயலைக் கண்டு

Q24 அரசர், விவசாயிக்கு அளித்த முத்துமாலை அவன் அன்புக்கு ஈடாகாது என்று ஏன் சொன்னார்?

(1) விவசாயியின் தைரியமான செயலைக் கண்டபோது
(2) விவசாயி கொண்டு வந்த மூலிகையை ஏற்றுக்கொண்டபோது
(3) விவசாயியின் தூய்மையான அன்பை உணர்ந்தபோது
(4) விவசாயி காவலர்களையும் ஏமாற்றி மன்னரின் படுக்கையினுள் நுழைந்ததால்

More papers at www.testpapersfree.com

**சொற்பொருள்** (2 மதிப்பெண்கள்)

**வினா Q25 இடம் பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு.**

Q25 தேறவேண்டுமென்று

(1) மெலியவேண்டுமென்று
(2) இளைக்கவேண்டுமென்று
(3) குணமடையவேண்டுமென்று
(4) வெற்றியடையவேண்டுமென்று

More papers at www.testpapersfree.com

"ஆ" பிரிவு

C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது .

Q26 தேசிய தினத்தன்று வண்ண வண்ண ____________ வேடிக்கைகள் வெடிக்கப்பட்டன. அவை பெரியவர்களையும் சிறுவர்களையும் வெகுவாகக் கவர்ந்தன. Q26 ( )

Q27 அண்டை நாட்டில் வழிப்பறிக்கொள்ளைகள் அதிகரித்துள்ளன. இப்பிரச்சனையை ____________ மலேசிய அரசாங்கம் பல முயற்சிகளைச் செய்து வருகிறது. Q27 ( )

Q28 சரவணன் தோட்டத்தில் உலாவியபோது, ஒரு ____________ அவன் கையைக் கொட்டிவிட்டது. அதனால் அவனது கை வீங்கியது. Q28 ( )

Q29 இந்தியாவிலுள்ள ஒரு கிராமத்தில் பழங்காலத்துக் கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் ____________ எழுத்துகள் தமிழ் எழுத்துகள் என்று ஆய்வாளர்கள் கூறினர். Q29 ( )

| | |
|---|---|
| 1) பொரிக்கப்பட்ட | 2) குறைக்க |
| 3) குளவி | 4) பொறிக்கப்பட்ட |
| 5) குரைக்க | 6) வான |
| 7) வாண | 8) குழவி |

More papers at www.testpapersfree.com

D7 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள் )

பின்வரும் விளம்பரத்தை கருத்தூன்றிப் படி.

## வாரீர்! வாரீர்! பாரம்பரிய அருங்காட்சியகம்

நவம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை


காத்திருக்கும் கவர்ச்சியான நிகழ்ச்சிகள்



தேதி: 1/11/2017
நாள்: சனிக்கிழமை
முதல் 200 பார்வையாளர்களுக்கான பரிசுகள்!
- நிழல் பொம்மைகளின் திறமை காட்சிகளை காணலாம்
- ஆசிய கலாச்சார திரைப்படத்தைக் கண்டு களிக்கலாம்
- 3 வயது முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகள் இலவசமாக முகத்தில் சாயம் பூசும் முக ஓவியம்

தேதி: 6/11/2017
நாள்: சனிக்கிழமை
*சிங்கபூர் சீன இசைக்குழு செயல்திறன் படைப்பு
* எமிலி ஹில்லின் 'பெருநாகன்' என்ற நாடகம்
* இளம், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் வழங்கும் 'சிங்கப்பூரில் பழங்கால கண்டுபிடிப்புகள்' பற்றிய பேச்சு





தேதி: 15/11/2017
நாள்: சனிக்கிழமை
- மறு படைப்பாக ஆசிய கலாச்சார திரைப்படம்
- பங்ரா - இந்திய நாடக நாட்டியம்
- பலூனைச் சிற்பமாக உருவாக்கும் பட்டறை

*டிஜிட்டல் (Digital) கேமராவைப் பயன்படுத்தி புதையல் வேட்டையாடுதல்
*12 முதல் 18 வயது வரை இருந்தால், தகுதி பெற 4 குழுவை உருவாக்க வேண்டும்
*குழுக்கள் 50 வெள்ளி கட்டணம் செலுத்தவேண்டும்
*பங்கேற்கும் அனைவருக்கும் சான்றிதழ்களும், வெற்றி பெறும் குழுவுக்கு பரிசும் உண்டு!

More papers at www.testpapersfree.com

Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக்கொண்டு அமைந்து உள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. ( 10 மதிப்பெண்கள் )

Q30 நிகழ்சிகள் நடத்தப்படுவதன் நோக்கம் என்ன?

(1) மக்களைப் பாரம்பரிய அருங்காட்சியகத்திற்கு வரவேற்க
(2) மக்களிடையே பிணைப்பை ஏற்படுத்த
(3) பாரம்பரிய அருங்காட்சியகத்திற்கு நிதி திரட்ட
(4) ஆசியா கலாசாரத்தை வளர்க்க ( )

Q31 பாரம்பரிய அருங்காட்சியகத்தில் எந்த நிகழ்ச்சி இரு முறை அரங்கேறும்?

(1) சிங்கப்பூர் சீன இசைக்குழு செயல்திறனின் படைப்பு
(2) எமிலி ஹில்லின் 'பெருநாகன் என்ற நாடகம்'
(3) ஆசிய கலாச்சார திரைப்படம்
(4) பாங்கரா இந்திய நாட்டிய நாடகம் ( )

Q32 5 வயதுள்ள குழந்தைகளைப் பெற்றோர்கள் எந்த நிகழ்ச்சியில் ஈடுபடுத்தலாம்?

(1) முகத்தில் சாயம் பூசும் ஓவிய நிகழ்ச்சிக்கு
(2) டிஜிட்டல் (Digital) கேமராவைப் பயன்படுத்தும் வேட்டைக்கு
(3) சிங்கபூர் சீன இசைக்குழு செயல்திறன் படைப்புக்கு
(4) பலூன்களைச் சிற்பமாக உருவாக்கும் பட்டறைக்கு ( )

Q33 புதையல் வேட்டைக்குத் தகுதிப்பெற என்ன செய்யவேண்டும்?

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

More papers at www.testpapersfree.com

D8 சுயவிடைக் கருத்தறிதல் (22 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

கந்தன் என்னும் திறமையான ஓவியன் ஒருவன் இருந்தான். தன் திறமை மீது மிகவும் கர்வம் கொண்டவனாக இருந்ததால் அவன் யாரையும் மதிப்பதில்லை. அதே ஊரில் மாறன் என்னும் திறமையான ஓவியனும் இருந்தான். மக்களிடம் பெரிதும் புகழ் பெற்றதோடு, அன்பும் பணிவும் கொண்டவன். ஒருநாள் கந்தன், தன் திறமையைக் காட்டி பெருமைப்பட்டுக் கொள்வதற்காக மாறனை அழைத்தான். அப்போது அவன் பழங்களின் ஓவியம் ஒன்றை வரைந்து முடித்திருந்தான்.

கந்தனின் ஓவியத்தைப் பார்த்த மாறன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். ஏனென்றால், அந்த ஓவியம் அவ்வளவு சிறப்பாக வரையப்பட்டிருந்தது. அந்த ஓவியத்தில் இடம் பெற்றிருந்த கனிகளும் இலைகளும் அவ்வளவு தத்ரூபமாக இருந்தன. யார் பார்த்தாலும் உண்மையான கனிகள் என்று நம்பிவிடுவார்கள். கந்தனின் திறமையை உணர்ந்துகொண்ட மாறன் அவனை மனப்பூர்வமாக பாராட்டினான்.

பிறகு, கந்தன் அந்த ஓவியத்தை எடுத்துச் சென்று தன் வீட்டு வாசலில் வைத்தான். சற்று நேரத்திற்குப் பிறகு அந்த ஓவியத்தை நோக்கிப் பறவைகள் வந்தன. சித்திரத்திலுள்ளவை உண்மையான பழங்கள் என்று நினைத்துக் கொத்தித் தின்ன முயன்றன. ஆனால், ஓவியம் பலகையில் வரையப்பட்டு இருந்ததால், அலகில் அடிப்பட்டுக் கீழே விழுந்து ஏமாந்தன.

கந்தனின் செயலைப் பார்த்து மிகவும் வருத்தமுற்றான் மாறன். கந்தன் தன் திறமையால், பரிதாபத்திற்குரிய பறவைகளை ஏமாற்றியது அவனுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. எனவே, அவனுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று நினைத்தான். " கந்தா, உங்கள் திறமையைக் கண்டு பெரிதும் மகிழ்வதோடு, உங்களுக்கு விருந்தளித்துக் கௌரவிக்க வேண்டும் என்று நினைக்கிறேன். " என்றான்.

மறுநாள் விருந்திற்குச் சென்ற கந்தனை அன்புடன் வரவேற்று உபசரித்தான் மாறன். விருந்து மேசையில் பலவிதமான உணவு வகைகள் பரிமாறப்பட்டிருந்தன. அவற்றைப் பார்த்த கந்தனுக்கு நாவில் நீர் ஊறி, பசி பெருகியது. அவன் ஆவலுடன் அந்த உணவு மேசை அருகில் அமர்ந்தான். மேசையிலிருந்த உணவுப் பொருள்களை எடுத்து உண்ண முயன்ற கந்தன் பெருத்த அதிர்ச்சி அடைந்தான். மேசையில் பரிமாறப்பட்டிருக்கும் உணவுகள் உண்மையானவை அல்ல. அவை மேசை மீது

More papers at www.testpapersfree.com

வரையப்பட்டிருந்தன. ஓவியம் என்று நினைத்துப் பார்க்க முடியாதபடி அந்தளவு துல்லிதமாக இருந்தன. அதைக்கண்டு **கந்தன் அப்படியே உறைந்து போய் அமர்ந்துவிட்டான்.**

அப்போது மாறன் " நீங்கள் உங்கள் திறமையால் அந்தப் பறவைகளை ஏமாற்றினீர்கள் அல்லவா, அதனால் தான் நான் இப்படிச் செய்தேன்; திறமையும் அறிவும் மிக்கவர்கள் ஆணவம் கொள்ளாமல், அன்புடனும் பணிவுடனும் இருக்க வேண்டும். நம் திறமையைக் கொண்டு நாம் நல்லது தான் செய்யவேண்டுமே தவிர தீங்கு செய்யக்கூடாது." என்றான். அதைக்கேட்ட கந்தன், மாறனிடம் மன்னிப்புக் கேட்டுத் திருந்திய மனிதனாக அங்கிருந்து வெளியேறினான்.

**Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது.**

Q34 கந்தனும் மாறனும் எத்தகைய குணமுடையவர்கள்?

(3 மதிப்பெண்கள்)

___

___

___

___

Q35 மாறனை அழைத்த கந்தன் என்ன செய்தான்?

(2 மதிப்பெண்கள்)

___

___

___

___

More papers at www.testpapersfree.com

Q36 கந்தனின் ஓவியம் எவ்வாறு பெருமைப்படும் படி இருந்தது?
(3 மதிப்பெண்கள்)

Q37 எத்தகையச் செயல் மாறனைக் கவலையடையச் செய்தது?
(3 மதிப்பெண்கள்)

Q38 'கந்தன் அப்படியே உறைந்து போய் அமர்ந்துவிட்டான்' என்னும் வாக்கியம் உணர்த்தும் கருத்து என்ன?
(3 மதிப்பெண்கள்)

More papers at www.testpapersfree.com

Q39 கந்தன் மனம் திருந்தினான் என்பதை நாம் எவ்வாறு அறியலாம்?
(4 மதிப்பெண்கள்)

Q40 இந்தக் கதையிலிருந்து மாறனிடமிருந்து என்ன பண்புகளைக் கற்றுக்கொண்டாய் என்பதை பற்றி நீ உன் நண்பனுக்கு ஒரு குறிப்பு எழுது.

அன்புள்ள நண்பனுக்கு,

இப்படிக்கு,
உன் தோழன்

More papers at www.testpapersfree.com

# Answer Key

(கட்டடத்தின் இரண்டாவது)

| | | |
|---|---|---|
| 1. 3<br>2. 4<br>3. 3<br>4. 4<br>5. 2<br>6. 1<br>7. 2<br>8. 3<br>9. 4<br>10. 3<br>11. 4<br>12. 2 | 13. 3<br>14. 3<br>15. 4<br>16. 2<br>17. 3<br>18. 3<br>19. 1<br>20. 3<br>21. 3<br>22. 2<br>23. 1<br>24. 3<br>25. 3 | 26. 7<br>27. 2<br>28. 3<br>29. 4<br>30. 4<br>31. 3<br>32. 1 |

33. புதையல் வேட்டைக்குத் தகுதி பெற 12 முதல் 18 வரையுள்ளோர் 4 குழுக்களை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் 50 வெள்ளி பதிவுக்கட்டணம் செலுத்த வேண்டும். இவையே புதையல் வேட்டைக்குத் தகுதிப்பெற செய்ய வேண்டியவை ஆகும்.
34. கந்தன் திறமையான ஓவியனாக இருந்தாலும் அவன் தன் திறமை மீது மிகுந்த கர்வம் கொண்டவனாகவும் யாரையும் மதிக்காதவனாகவும் இருந்தான். ஆனால், மாறன் திறமையான ஓவியனாக இருந்தபோதும், மக்களிடம் பெரிதும் புகழ் பெற்றதோடு, அன்பும் பணிவும் கொண்டவனாக திகழ்ந்தான்.
35. கந்தன், தன் திறமையை மாறனிடம் காட்டிப் பெருமைப்பட்டுக் கொள்வதற்காக அவனை அழைத்தான். கந்தன் அப்போது பழங்களின் ஓவியம் ஒன்றை வரைந்து முடித்திருந்தான்.
36. கந்தனின் ஓவியம் மிகவும் சிறப்பாக வரையப்பட்டிருந்தது. அதில் இடம் பெற்றிருந்த கனிகளும் இலைகளையும் யார் கண்டாலும் அவை உண்மையான கனிகள் என்று நம்பிவிடும் அளவிற்கு மிக தத்ரூபமாக இருந்தன. கந்தனின் ஓவியம் இவ்வாறு பெருமைபடும்படி இருந்தது.
37. கந்தன், தன் திறமையால் தத்ரூபமாக வரைந்த கனிகளின் ஓவியத்தை அவனுடைய வீட்டு வாசலில் வைத்தான். அந்த சித்திரத்திலுள்ள பழங்கள் உண்மையானவை என்று நினைத்து பறவைகள் கொத்தி தின்ன

More papers at www.testpapersfree.com

முயன்று அலகில் அடிப்பட்டுக் கீழே விழுந்து ஏமாந்தன. கந்தனின் இத்தகைய செயல் மாறனைக் கவலையடையச் செய்த்து.

38. மாறன் மேசை மீது வரைந்திருந்த ஓவியத்தை உணவு பரிமாறப்பட்டிருக்கிறது என்று நினைத்து எடுத்து உண்ண முயன்றான். அது ஓவியம் என்றும் மிகத் துல்லியமாக வரையப்பட்டிருக்கிறது என்று அறிந்ததும் திகைத்து போனதையே 'கந்தன் அப்படியே உறைந்து போய் அமர்ந்து விட்டான்' என்னும் வாக்கியம் உணர்த்தும் கருத்து ஆகும்.

39. மாறனின் அறிவுரையைக் கேட்ட கந்தன், மாறனிடம் மன்னிப்புக் கேட்டு திருந்திய மனிதனாக அங்கிருந்து வெளியேனான் என்பதிலிருந்து கந்தன் மனம் திருந்தினான் என்பதை நாம் அறியலாம்.

40. திறமையும் அறிவும் மிக்கவர்கள் ஆணவம் கொள்ளாமல், அன்பாகவும் பணிவாகவும் இருக்க வேண்டும். திறமையைக் கொண்டு நல்லது செய்ய வேண்டுமே தவிர யாருக்கும் தீங்கு செய்யக் கூடாது என்பதை இக்கதையின் மாறனிடமிருந்து கற்றுக் கொள்ளக் கூடிய பண்புகளாகும்.

More papers at www.testpapersfree.com